அறிவியல் சாதனங்கள்" போட்டியில் மட்டும் அவர்கள் ஆறு தங்கப் பதக்கங்களையும், நான்கு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றனர். அத்துடன் முதலுதவி சிகிச்சையில் குழுப் பணிக்கான வீரக் கேடயத்தையும் (Championship Shield) அக்குழுவினர் பெற்றனர். மொத்தத்தில், தமிழ்நாடு காவல்துறை குழுவினர், மூன்று கேடயங்கள், ஆறு கோப்பைகளைத் தவிர, பதினேறு தங்கப்பதக்கங்களையும் ஏழு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றனர்.

(உ) காவல்துறை குழுவினரில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது பரிசுகளைப் பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் அளிக்கப்பட்டன. மற்ற வர்களுக்கு நற்பணிக் குறிப்புகள் வழங்கப்பட்டன.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மொத்தப் பரிசுகள் எவ்வளவு வழங்கப்பட்டன? அவற்றில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பெற்ற பரிசு கள் எவ்வளவு? தமிழ் நாட்டிற்கு அடுத்தபடியாக வந்த மாநிலம் எது எனத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தமிழ் நாட்டிற்கு அடுத்தபடியாக வந்த மாநிலம் பற்றிய விவரங்கள் ஏதும் இல்லை. பரிசுகளைப் பொறுத்தவரையில், நான் முதலிலேயே சொன்னேன். ஆனால் மொத்தப் பரிசுகள் எவ்வளவு என்ற விவரமும் இல்லை. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பதினேரு தங்கப் பதக்கங்களையும், ஏழு வெள்ளிப் பதக்கங்களையும், நான்கு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றார்கள். அது மட்டுமின்றி வீரக் கேடயத்தையும் அவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

Drafting best Judgment in Tamil

*237 Q.—PULAVAR O. ARIVUDAI NAMBI (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar): Will the Hon. the Minister for Industries be pleased to state the number of persons who were awarded so far by the Tamil Nadu Government for drafting best judgment in Tamil?

தமிழில் சிறந்த தீர்ப்பு எழுதுதல்

புலவர் ஓ. அறிவுடைநம்பி (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழில் சிறந்த தீர்ப்பு எழுதியதற்காக இதுவரையில் தமிழக அரசு எத்தனை பேருக்குப் பரிசு வழங்கியிருக்கிறது?

1974 மார்ச் 28]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழில் சிறந்த தீர்ப்பு வழங்கியதற்காக எவருக்கும் பரிசு வழங்கப்படவில்லை. ஆனால், உரிமை வழக்குச் சட்டத்தில் குறிப்பிட்ட தலைப்புகளில் சிறந்த மாதிரித் தீர்ப்புகளும், ஆணைகளும் எழுதியமைக்காக உதகமண்டலத்தில் அப்போதிருந்த துணை நீதிபதியாகிய திரு. வி. சுப்பிரமணியம் என்பவருக்கு ரூ. 3,000 ரொர்க்கப் பரிசும், குற்றவியல் சட்டத்தில் குறிப்பிட்ட தலைப்புகளில் சிறந்த மாதிரித் தீர்ப்புகளும், ஆணைகளும் எழுதியமைக்காக சீர்காழியில் அப்போதிருந்த உதவி மாஜிஸ்ட்ரேட்டாகிய திரு. டீ. சிவசிதம்பரம் என்பவருக்கு ரூ. 2,000 ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டுள்ளது.

Special Pay to Shorthand Writers working in the Judicial Department

*238 Q.—Thiru M. ARUMUGASWAMI (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Second Tamil Nadu Pay Commission 1969–70 and the High Court have recommended special pay to Shorthand Writers working in the Judicial Department; and

(b) if so, the action taken thereon?

நீதித் துறையில் பணியாற்றுகிற சுருக்கெழுத்தர்களுக்குச் சிறப்புச் சம்பளம்

திரு. எம். ஆறுமுகசாமி (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1969-70-ல் நியமிக்கப்பட்ட தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழுவும், உயர்நீதி மன்றமும், நீதித் துறையில் பணியாற்றுகிற சுருக்கெழுத்தர்களுக்குச் சிறப்புச் சம்பளம் அளிக்குமாறு பரிந்துரை செய்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS